# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தம்)

**1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

தொழில் அமைச்சர் அவர்களால்
2026 யூலை மாதம் 22 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2026 யூன் மாதம் 25 ஆம் திகதியன்று வர்த்தமானியில்
வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[72 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 14.50 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது பத்தாயிரம் ரூபா என்னும் குற்றப்பணமொன்றிலிருந்து ஒரு இலட்சம் ரூபா என்னும் குற்றப்பணமொன்றுக்கு உளதாயிருக்கும் தண்டப்பணத்தை அதிகரிப்பதாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது பத்தாயிரம் ரூபா என்னும் குற்றப்பணமொன்றிலிருந்து ஒரு இலட்சம் ரூபா என்னும் குற்றப்பணமொன்றுக்கு உளதாயிருக்கும் தண்டப்பணத்தை அதிகரிப்பதாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது பத்தாயிரம் ரூபா என்னும் குற்றப்பணமொன்றிலிருந்து ஒரு இலட்சம் ரூபா என்னும் குற்றப்பணமொன்றுக்கு உளதாயிருக்கும் தண்டப்பணத்தை அதிகரிப்பதாகும்.

***வாசகம் 5*** : இவ்வாசகம் இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் புரியப்பட்ட தவறுகளுக்காக விதிக்கப்பட்ட குற்றப்பணங்கள் தொடர்பாக முதன்மைச்சட்டவாக்கத்தின் 7, 13 மற்றும் 20அ என்னும் பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்களின் ஏற்புடைமையை விலக்குவதாகும்.

## பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தம்)

ச.வ.-ஒ 55/2025

## 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**2**. (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1956 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 7 ஆம் பிரிவானது, அதன் (3) ஆம் உட்பிரிவில் “பத்தாயிரம் ரூபாவை” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஒரு இலட்சம் ரூபாவை” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில் “பத்தாயிரம் ரூபாவை” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஒரு இலட்சம் ரூபாவை” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவினைத் திருத்துதல்

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவானது அதன் (3) ஆம் உட்பிரிவில் “பத்தாயிரம் ரூபாவை” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஒரு இலட்சம் ரூபாவை” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் புரியப்பட்ட தவறுகள்

**5**. பிரிவுகள் 7, 13 மற்றும் 20அ என்பவற்றுக்கு செய்யப்பட்ட திருத்தங்கள், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் ஏதேனும் தவறு புரியப்பட்டுள்ளவிடத்து மேலேயுள்ள பிரிவுகளின் கீழ் புரியப்பட்ட அத்தகைய தவறு தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

PL 15864 - 172 (2026/07)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.